**IN THE COURT OF DISTRICT MUNSIF, GUDIYATTAM, VELLORE DISTRICT.**

**OS. No. 119/2020**

| | | DEPOSITION OF WITNESS | PW.2 |
|---|---|---|---|
| NAME | சுகேப் சையத் உஸ்மான் | TALUK | குடியாத்தம் |
| FATHER NAME | சையத் உஸ்மான் | RELIGION | |
| AGE | 42 | OCCUPATION | |
| VILLAGE | தரணம்பேட்டை | | |

Solemnly affirmed in accordance with the provisions Act of 1873 on the day of 04.11.2025.

**பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை :-**

1. என்னை இந்த வழக்கில் சாட்சி சொல்ல அஸ்லாம் அழைத்து வந்தாரா என்றால் ஆமாம். அஸ்லாம் குடியிருக்கும் ஆலியார் தெருவில் நான் குடியிருக்கிறேனா என்றால் ஆமாம். நான் கொடுத்துள்ள கதவு எண்.162-ல் அஸ்லாம் தம்பி ஆலியார் குடியிருக்கிறார் என்றால் சரியல்ல. அந்த கதவு எண்ணில் அஸ்லாம் தம்பி குடியிருக்கிறார் என்றாலும் அவர் தாவா சொத்தை அஸ்லாமிற்கு விற்பனை செய்துவிட்டார் என்றாலும் அதனால் நானும் அவரும் ஒரே முகவரியில் குடியிருக்கிறோம் என்றால் சரியல்ல.

2. அஸ்லாம் என்ன வழக்கு போட்டுள்ளார் என்று தெரியும் சொத்து அஸ்லாம் உடையது தேவராஜ் அதில் ஆக்கிரமிப்பு செய்ய முயற்சிக்கிறார். சொத்து சைனகுண்டா கிராமத்தில் ஊருக்கு மேல்பக்கம் உள்ளது. அந்த நிலத்தின் செக்குபந்தி தெரியுமா என்றால் கீழ்பக்கம் தேவராஜ் இருக்கிறார் மேல்பக்கம் அஸ்லாம் இருக்கிறார், திசை வைத்து தெரியாது. வாதி அஸ்லாமிற்கு தாவா சொத்தை தவிர்த்து வேறு சொத்து உள்ளதா என்றால் அதே ஊரில் மெயின் ரோட்டில் ஒரு சொத்து உள்ளது. இந்த சொத்தில் மாமரங்கள் உள்ளது.

3. அந்த சொத்திற்கு பாசன வசதி தெரியுமா என்றால் போர் உள்ளது. போர் வசதி யார் ஏற்படுத்தியது என்றால் அஸ்லாம். அவர் வாங்கியபிறகு ஏற்படுத்தினாரா என்றால் ஆமாம். அந்த இடத்தில் எத்தனை மாமரங்கள் உள்ளது என்றால் சுமார் 300 இருக்கலாம். அந்த இடத்தில் எத்தனை அடுக்குகளாக மாமரங்கள் உள்ளது என்றால் நேராக தான் உள்ளது.

4. நான் கிரையப்பத்திரத்தில் சாட்சி கையெழுத்து போடவில்லை என்றால் சரிதான். நான் அஸ்லாம் உறவினர் என்பதால் அவர் சொல்லி கொடுத்து சாட்சி சொல்கிறேன் என்றாலும் அஸ்லாம் மற்றும் தேவராஜிக்கு என்ன பரிவர்த்தனை நடந்தது என்று எனக்கு தெரியாது என்றால் சரியல்ல. தற்போது வரை தேவராஜ் சுவாதீனத்தில் தாவா சொத்து உள்ளது என்றாலும் எனது பொய்யான சாட்சியம் ஏற்றுக்கொள்ளக்கூடியது என்றால் சரியல்ல, அஸ்லாம் சுவாதீனத்தில் உள்ளது. முதல் விசாரணையில் சொல்லியுள்ள சங்கதிகள் பொய்யானவை என்றாலும் அவை ஏற்றுக்கொள்ளக்கூடியவை அல்ல என்றால் சரியல்ல.

K KARTHICK ASATH

Digitally signed by K KARTHICK ASATH

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
குடியாத்தம்.